**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.147/2020**
**Prosecution Witnesses :3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசந்திரன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : சேதுராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(06.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பொக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் லைட்மேனாக வேலை செய்து வருகிறேன். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது கேள்விபட்டேன். சம்பவத்தின் போது நான் சென்னையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 17.05.2017ம் தேதி இரவு சுமார் 2.30 மணியளவில் நான் வீட்டில் படுத்துக் கிடந்தபோது எங்கள் தெருவில் குடியிருக்கும் சீனிவாசன் மனைவி பிச்சைமணி என்பவர் ஐயோ நகையை அத்துக் கொண்டு ஓடுராங்க வாங்க என்று அலறல் சத்தம் நான் எழுந்து ஓடிபோய் பார்த்த போது பிச்சைமணியின் வீட்டில் வடக்குபக்கமாக 30 முதல் 55 வயது மதிக்கதக்க 2 நபர்கள் ஓடினார்கள். நானும் சிலரும் பின்னாடி சென்று விரட்டினோம். இதற்குள் அவர்கள் ஓடி மறைந்துவிட்டார்கள். அதற்க பின்பு பிச்சைமணியை விசாரித்த போது இரவில் புழுக்கமாக

இருந்ததால் நான் வடக்கு புறத்தின் மேலும் எனது வீட்டுக்காரி தெற்கு புற திண்ணையிலும் படுத்துக் கிடந்தார். நான் தூங்கி கொண்டிருந்த போது யாரோ எனது மனைவியின் தங்க தாலி செயினை இழுப்பதை தெரிந்து நான் செயினை பிடித்துக்கொண்டதில் சுமார் 1 –1/4 பிட்செயின் எனது கையிலும் மீதம் 4 –1/2 பவுனை அத்துவிட்டு என் வீட்டுக்காரியை கட்டையால் எறிந்து கீழே தள்ளி காலில் காயத்தை ஏற்படுத்திவிட்டு ஓடிவிட்டார்கள். வந்தது 30 – 37 வயதுடைய 2 நபர்கள், ஒருத்தன் என் நகையை அத்தான். அவன் புளுகலர் டவுசர் போட்டு தலைமுடியை ஒட்ட வெட்டியிருந்தான். மற்றொருவன் கம்பை வைத்து கொஞ்சம் தள்ளி இருந்தான் என்று அவர் என்னிடம் கூறினார் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி. இல்லை**

**மறுவிசாரணை**. இல்லை